**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 162/2020**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 மன்னர்மன்னன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 03.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வாதி எந்த ஊரினை சேர்ந்தவர் என்றால் நெய்தலூரில் இருந்தார். பின்னிட்டு பொய்யாமணி வந்துவிட்டார். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் நெய்தலூர் கிராமத்தில் உள்ளது. என் தகப்பனார் ஊரில் முக்கியமான நபர் என்றால் சரியல்ல. அவர் ஆசிரியர். ஆசிரியர் பணி செய்ததால் அவர் நல்ல வசதி என்றால் இல்லை. என் தந்தை உயிருடன் இருந்த காலத்தில் நிறைய சொத்துக்களை உள்ளூரில் வாங்கினார் என்றால் இல்லை. தாவா சொத்துக் குறித்து தெரியுமா என்றால் முழுவதும் தெரியாது. ஓரளவு தெரியும். வாதி ஊர் வெட்டியான் என்றால் சரிதான். ஊரில் யாரெனும் இறந்தால் அவர்களது உடலை எரிப்பதுதான் வெட்டியான் வேலை என்றால் சரிதான். அதுதான் அவரது தொழில்.

2) வாதி மேற்படி தொழிலை அவரது தகப்பனார் காலம் முதல் செய்து வருகிறார் என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்து வாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தாவா சொத்தில் என்ன பாத்தியம் என்றால் நான் இளவராக இருந்தபோது என் பெயரில் என் தகப்பனார் வாங்கினார். நான் இளவராக இருந்ததால் என் தகப்பனார் தாவா சொத்தை எவ்வாறு வாங்கினார் என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டாவது தாவா சொத்து எப்படி யாரிடம் இருந்து வந்தது என தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வழக்குரையில் தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என வாதி சொல்லியுள்ள சங்கதிகளை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. ஆதியில் தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என சொல்லியுள்ளாரா என்றால் அதுபற்றி தெரியாது.

3) தாவா சொத்தை வாதிக்கு அவர் செய்யும் தொழிலுக்காக அரசால் இனாமாக கொடுக்கப்பட்ட நிலம் என்றால் அதுபற்றி தெரியவில்லை. தாவா சொத்து பஞ்சமி நிலமா என்றால் தெரியாது. தாவா சொத்தை விற்கவோ வாங்கவோ யாருக்கும் உரிமையில்லை என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி விபரங்கள் என் தகப்பனாருக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து 2 ம் பிரதிவாதிக்கு

தெரியும். தாவா சொத்தை குறித்து ஏற்பட்ட ஒவ்வொரு ஆவணங்களிலும் என் தகப்பனார் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும் என் தகப்பனாருடன் இருந்து ஒவ்வொரு ஆவணத்திலும் கையொப்ப,ம் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வாதி எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என தெரியுமா என்றால் தெரியாது.

4) வாதி தாக்கல் செய்த வழக்குரை மற்றும் ஆவணங்களை பார்வையிடாமலேயே பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்த்தேன். சாட்சி மீண்டும் பார்க்கவில்லை என்றும், ஞாபகமில்லை என்றும் கூறுகிறார். என் தந்தை என் மீது சொத்தை எழுதிவைத்துள்ளதால் எனக்கு பாத்தியம் என எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். கிரைய ஆவணம் எப்போது ஏற்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை. 1996ம் வருடமாக இருக்கலாம். நான் எப்போது பிறந்தேன் என்றால் 1983ல் பிறந்தேன். எனது தகப்பனார் சொத்தை கிரையம் பெற்றவுடன் என் சார்பில் அவர் சுவாதீனம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். என் தந்தை எப்போது என்னிடம் சொத்தை சுவாதீனம் ஒப்படைத்தார் என்றால் என் தந்தைக்கு பின்னிட்டு நான்தான் சுவாதீனத்தில் இருக்கிறேன். என் தந்தை 17.07.2012ல் இறந்தார்.

5) என் தந்தை இறந்தபின்னிட்டுதான் நான் சொத்தை சுவாதீனம் எடுத்தேன் என்றால் சரியல்ல. அவர் உடல்நிலை சரியில்லாதபோதே நான்தான் சுவாதீனத்தில் இருந்தேன். எனக்கு தொழில் விவசாயம் ஆகும். நான் BCA படித்துள்ளேன். 2006ம் வருடம் முடித்தேன். நான் படித்து முடிக்கும்வரை என் தகப்பனார் தான் சொத்தை பாதுகாத்து வந்தார் என்றால் நானும் அவரும் தான் சுவாதீனத்தில் இருந்தோம். தாவா சொத்தின் சர்வே எண். என்னவென்றால் 280/3 ஏ ஆகும். மேற்படி சர்வே எண்ணை ஒட்டி எனக்கு வேறு நிலம் இருந்ததா என்றால் இருந்தது விற்றுவிட்டோம். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்திற்கு மேற்கே பொதுப்பணித்துறை வாய்க்கால், கிழக்கே சுப்பையன் மற்றும் ரெங்கன் நிலம் , தெற்கே செந்தாமரை நிலம் உள்ளது. செந்தாமரையின் தகப்பனார் பெயர் கிருஷ்ணா ரெட்டியார். வடக்கே மற்றொரு செந்தில்குமார் நிலம் உள்ளது.

6) மேற்படி நான்கெல்லைக்குள் 1 ஏக்கர் நிலம் உள்ளது. பட்டா என் பெயரில்தான் உள்ளது. பட்டா எண் தெரியவில்லை. எப்போது என் பெயரில் பட்டா மாறியது என்றால் என் தகப்பனார் காலத்திலேயே மாறிவிட்டது. ஊரில் பஞ்சாயத்து

ஏதேனும் நடந்தால் நான் செல்வேனா என்றால் இல்லை. ஊரில் அடிக்கடி பஞ்சாயத்து நடக்குமா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்ததா என்றால் நடந்ததாக சொன்னார்கள். ஆனால் நான் போகவில்லை.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**